விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 வைகாசி 23 றம்ழான் 27 இதழ் 115

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 6-6-1986

யாழ். அரச அதிபர் பயணம்செய்த

## லொறி மீது ஷெல் தாக்குதல் சாரதி, கிளீனர் பலி

[யாழ்ப்பாணம்]

கொழும்பிலிருந்து யாழ். மாவட்டத்துக்கான உணவு முத்திரைப் புத்தகங்களை ஏற்றிக்கொண்டு யாழ். அரசாங்க அதிபர் திரு. ம். பஞ்சலிங்கம், பொதுசன தொடர்பு அதிகாரி திரு. குலசேகரம் மற்றும் சாரதி இரு கிளீனர்கள் வந்த லொறி ஷெல் தாக்குதலுக்கிலக்கானதில் லொறி பலத்த சேதமடைந்ததுடன் சாரதியும், கிளீனரும் ஸ்தலத்திலேயே பலியானார்கள்; யாழ். அரசாங்க அதிபரும், பொதுசன தொடர்பு அதிகாரியும் மயிரிழையில் உயிர் தப்பினர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் யாழ். அரசாங்க அதிபர் வந்து கொண்டிருந்த லொறி பரந்தன் நெல் சந்தைப்படுத்தும் சபைக்கட்டிடத்தை அண்மித்தபொழுது தூரத்தில் பச்சை நிறம் போன்ற வஸ்து வருவதாக சாரதி தெரிவித்தாராம் அப்பொழுது அரசாங்க அதிபரும், பொதுசன தொட

(6ம் பக்கம் பார்க்க)

# திருமலை 4-ம் கட்டை வீதியில் பஸ் பயணிகள் மீது தாக்குதல்

RECEIVED -6-1986 PERIODICAL DIVISION LIBRARY

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலையிலுள்ள அநுராதபுரம், கந்தளாய் ஆகிய இடங்களை இணைக்கும் 4 ம் கட்டை வீதி நேற்று முன் தினம் பிற்பகல் முதல் குண்டர்களின் பயங்கரக் கெடு பிடிகளுக்குள்ளாகியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தினூடாகச் சென்ற சகல பஸ் வண்டிகளிலும் தமிழர்கள் இனங் காணப்பட்டு பயங்கரத் தாக்குதலுக் குள்ளானதாகவும், இதில் பலர் கொல்லப்பட்டதாகவும், மேலும் பலர் காணமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த 4ம் கட்டைப் பகுதியினூடாகச் சென்ற பல பஸ் வண்டிகள் தடுத்து நிறுத்தப்பட்டு அவற்றிலிருந்த தமிழ்ப் பயணிகள் இறக்கப்பட்டு கடுந்தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டனர்.

இவர்களில் சுமார் 20 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர் எனவும், இவர்களின் சடலங்கள் சம்பவம் இடம்பெற்ற இடத்திலேயே எரியூட்டப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இதேவேளை நேற்றுப் பிற்பகல் திருமலை நீர்ப்பாசனத் திணைக்களத்தைச் சேர்ந்த சாரதியான சிவஞானம் என்பவர் இந்த 4ம் கட்டைப் பகுதியில் கொலையுண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இவரது சடலத்தைச் சிங்களப் பெண்ணொருவரது மனைவி எடுத்துவரச் சென்றபோதே அவ்விடத்தில் பல சடலங்கள் எரியூட்டப்பட்டிருக்கும் தகவல் தெரியவந்தது.

நேற்றுப் பிற்பகல் முதல் முகமூடியணிந்த சுமார் 150

[5ம் பக்கம் பார்க்க]

## பன்னிரெண்டு பேர் வெட்டிக் கொலை

[வவனியா]

வவனியாவிலிருந்து திருகோணமலைக்குச் சென்ற இ. போ. ச பஸ் வண்டி ஒன்று திருகோணமலை-கொழும்பு வீதியில் 4ம் கட்டை என்னும் இடத்தில்

(-5ம் ப கம் பார்க்க)

## கருணாநிதியின் கூட்டத்தில் குண்டுவெடிப்பு

[சென்னை]

திராவி முன்னேற்றக் கழகத் தலைவர் திரு மு. கருணாநிதி சென்னையில் பொதுக் கூட்டமொன்றில் பேசிக் கொண்டிருக்கையில் குண்டொன்று வெடித்தது இச்சம்பவத்தின்போது திரு கருணாநிதி காயம் எதுவுமின்றி உயிர் தப்பினர்.

சென்னை மெரீனா கடற்கரையருகேயுள்ள சீரணி அரங்கிலேயே மேற்படி பொதுக் கூட்டம் நடைபெற்றது

இந்த அரங்கிற்குவடகிழக்கே சுமார் 300 மீற்றர் தொலைவில் இக்குண்டு வெடித்தது இச்சம்பவத்தின் போது கடற்கரையருகேயிருந்த படகொன்று மட்டும் பலத்த சேதத்துக்குள்ளானது. பொது மக்கள் எவரும் காயத்துக்குள்ளாகவில்லை. (பி)

## சிமெந்துடன் சென்ற—— தாய்வான் கப்பல் மூழ்கடிப்பு?

[கொழும்பு]

யாழ்ப்பாணத்திலிருந்து பல லட்ச ரூபா பெறுமதியான சிமெந்துடன் கொழும்பு நோக்கிச் சென்ற தாய்லாந்து நாட்டுச் சரக்குக் சப்பலொன்றைக் காணவில்லை என்று கூறப்படுகிறது.

இதனைக் கண்டுபிடிக்க முடியாதிருப்பதாகவும், அநேகமாக இது குண்டுவைத்து மூழ்கடிக்கப்பட்டிருக்கலாமென்றும் ஆதாரமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

இம்மூழ்கடிப்பையடுத்து காலி, கொழும்பு, திருகோணமலை ஆகிய துறைமுகங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன

[து]

2வது நாளாக

## கிளிநொச்சி, ஆனையிறவில் நேற்றும் கடும் மோதல்

[அலுவலக நிருபர்]

கிளிநொச்சி பொலிஸ்-இராணுவ கூட்டு முகாமிலிருந்து நேற்றுக் காலை இரண்டாவது நாளாகவும் ஆயுதப் படையினர் வெளிவந்த பொழுது தமிழீழ விடுதலைப் புலிகள் இயகசப் போராளிகள் எதிர்த் தாக்குதல் மேற்கொண்டனர்.

இத்தாக்குதலின்போது இரு தரப்பினருகுமிடையே பலத்த மோதல் இடம்பெற்றது.

போராளிகளின் உக்கிரமான எதிர்த் தாக்குதலைத் தொடர்ந்து முகாமுக்குள் சென்ற ஆயுதப் படையினர் 'மோட்டார் ஷெல்' பிரயோகித்தனர். பல மைல்களுக்குப் பாய்ந்துசென்று சேதம் விளைவிக்கும் 'ஆட்லறி' 'ஷெல்' இதுவென்று கூறப்படுகிறது.

அதேசமயம் குண்டு வீச்சு விமானங்கள் ஆயுதப் படை முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளில் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தின. ஹெலிகொப்ட

(5ம் பக்கம் பார்க்க)

திருமண அழைப்பு

நிகழும் அட்ஷயவருடம் வைகாசிமாதம் 25ம் நாள் (8-06-86) ஞாயிற்றுக்கிழமை பகல் 10-49 தொடக்கம் 12-29 வரையுள்ள சிங்கலக்கின சுப முகூர்த்தத்தில்,

எமது புத்திரன் திருநிறை செல்வன் தியாகலிங்கம் (ஆசிரியர் நெடுந்தீவுசைவப்பிரகாச வித்தியாலயம்) அவர்களுக்கும்

எமது புத்திரி திருநிறை செல்வி ஜெயமலர் (ஆசிரியை பூநகரி மகாவித்தியாலயம்) அவர்களுக்கும்

யாழ் வண்ணை சிவன் ஆலயத்தில் திருமணம் நிகழ விருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராய் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தங்கள் நல்வரவை நாடும்,

திருமதி தங்கம்மா சுப்பிரமணியமும், குடும்பத்தினரும், 156, அரசடி வீதி. நல்லூர், யாழ்ப்பாணம்.

திரு. தி. அருணாசலமும் பாரியாரும், ''மகபதி'', 39, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.


[C 2733]

## கொழும்பில் விசேட திட்டம்

[கொழும்பு]

தீவிரவாதிகளின் நடவடிக்கைகளிலிருந்து கொழும்பு நகரைப் பாதுகாக்க விசேட திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி பாராளுமன்றத்தில் நேற்றுக் கூறினார்

இந்தப் பாதுகாப்பு ஒழுங்குகளை அமுல்படுத்த பொதுமக்களின் உதவி தேவை என்ற அமைச்சர், தெரிவு செய்யப்பட்ட மக்கள் குழுக்களிடம் அவர்களது பகுதியிலுள்ள நிறுவனங்கள், வீதிகள் அனைத்தினதும் பாதுகாப்பு பொறுப்பு ஒப்படைக்கப்படுமென்றார் [பி]



ஈழ விடுதலைப் போராளிக்ள் தினத்தைக் குறிக்கும் வகையில் உரும்பராய் சிவகுமாரன் சிலைக்கு முன்பாக இப்போராளிகள் தினத்தை ஒழுங்குசெய்த தமிழ் ஈழ மாணவர் பேரவையினர் (ரெஸோ) அணிவகுத்து நிற்பதைப் படத்தில் காணலாம். [ஐ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பம்பாய் வெங்காயவிதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C2589)

உயர்தர இந்தியா கோரோசனை, கஸ்தூரி, புனுகு, சந்தனத்தைலம், ஸ்பெயின் குங்குமப்பூ மற்றும் தற்கால சிகிச்சா கிரமத்திற்குப் பயனுள்ள புதிய சித்த ஆயுர்வேத மருந்துவகைகளும் விபரங்களுடன் வைத்தியர்கள் பெற்றுக்கொள்ளலாம். Dr. R. மங்களாம்பிகை D.A.M. மங்களபதி வைத்தியசாலை, 41/5, சங்கிலியன் வீதி, நல்லூர். [C-2571]

தெல்லிப்பழை துர்க்காதேவி அம்பாள் ஆலயத்துக்கும் கூட்டுறவு வைத்தியசாலைக்கும் மிக அருகாமையில் ஐந்து பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்கு உகந்தது. தொடர்பு கொள்ள வேண்டியது "வேலவன்ஸ்", 210, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். அல்லது சண்முகலிங்கம் சட்டத்தரணி, பன்னாலை, தெல்லிப்பழை. (C2710)

### தேவை

6''—9'', 1'' ½'' கல்லுகள், கண்டாவளை, மண்கும்பான் மணல் திருநெல்வேலி பல்கலைக்கழக வளாக கட்டிட வேலைத் தளத்திற்கு உடன் தேவை. மேற்படி பொருட்களை வேலைத்தளத்தில் பறிப்பதற்கு ஏற்ற றேற்றுடன் பின்வரும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்: 19, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம். (C2694)

### தவறிவிட்டது

கல்வியங்காடு நல்லூர்ச் சந்தை பஸ்தரிப்பு நிலையத்தில் பிரயாணப்பை ஒன்று சந்தசாமி கிருஷ்ணகுமாரின் பாஸ்போட்டுடன் 22-05-86 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அதே பஸ்தரிப்பு நிலையத்திற்கு முன்பாகவுள்ள ஈஸ்வரி மில்லில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C2712)


## பிரஜைகள் குழு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவரின் மறைவையொட்டி யாழ். பிரஜைகள் குழு தனது அஞ்சலியைத் தெரிவித்துள்ளது.

அந்த அஞ்சலி அறிக்கையில்: "அரச உதவி கிடைக்காத வேளையிலும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவன உதவி காரணமாக பல தமிழ் மக்களின் உயிரைக் காப்பாற்ற கூடிய நிலைமையை ஏற்படுத்தியவர் அமரர் விசுவலிங்கம் அவர்களே என்றும் அவரின் சேவையின் நினைவு கூரும் பிரஜைகள்குழு 'துயருறும் மனைவி மக்களுக்கு தனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது'' என்றும் தெரிவித்துள்ளது. [த]


உ
சிவமயம்

## 41-ம்நாள் நினைவஞ்சலி



செல்வன் கந்தசுவாமி நித்தியானந்தன் (அலெக்ஸ்)

மண்ணுலகம்: 31-03-1958
விண்ணுலகம்: 27-04-1986

வேங்கையின் வீரனை விண்ணைஇரத்துப்பார்க்கி தாங்கையில் ஏந்தியுயர் தாயகம் காண்பதற்கு தூங்காதுதோள் கொட்டிதோழரெனும்
வேங்கைகளுடன்நீங்காது நின்றுயிரை நீத்தான் நித்தியானந்தன்.

தாய், தந்தை
சகோதரர்கள்
நண்பர்கள்.
பண்டாரக்குளம் லேன், நல்லூர், யாழ்ப்பாணம். (C 2719)

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி



செல்வன் அமலதாஸ் ஞானப்பிரகாசம்

அற்புதப்பிறப்பு: 30-10-1961
அக்கிரமன்: அழிப்பு 06-06 1985

இரட்டையராகப் பிறந்து இரட்டிப்பான இன்பம் தந்தீர்
இரட்சகர் அழைக்கும் நேரம்
இரவோ பகலோ-அன்று இரணியன் ஒருவன் குண்டு
இரக்கமின்றி உன் உயிர் போக்கி
இமைமூட வைத்த தென்னே
இவ்வுலக வாழ்வை முடித்தாய் மகனே
அவ்வுலக வாழ்வு எப்படியோ?
உனது நினைவால் துயருறும்:

தாய், தம்பி, தங்கை உற்றார், உறவினர்.

பாக்கியம் ஞானப்பிரகாசம்,
57, சச்சேரி, இழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (C 2652)


## 'உலகக்கிண்ண' உதைபந்தாட்டம்:
# டென்மார்க், பருகுவே கோஷ்டிகள் வெற்றி

[மெக்ஸிக்கோ]

மெக்ஸிக்கோவில் நடைபெற்றுவரும் உலகக்கிண்ண' உதைபந்தாட்டப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு:

டென்மார்க்
வெற்றி

முதன்முறையாக 'உலகக் கிண்ண' உதைபந்தாட்டப் போட்டியில் விளையாடத் தகுதிபெற்ற டென்மார்க் கோஷ்டி, ஸ்கொட்லன் கோஷ்டியை 1-0 கோலால் வெற்றி பெற்றது

பருகுவே
வெற்றி

பருகுவேக்கும், ஈராக்குக்குமிடையில் நடைபெற்ற ஆட்டத்தில் பருகுவே 1-0 கோலால் வெற்றிபெற்றது இக்கோலை பருகுவேஆட்டம் தொடங்கி 35 வது நிமிடத்தில் போட்டது.

வெற்றி-தோல்வி
இல்லை

மேற்கு ஜேர்மனிக்கும், உருகுவேக்குமிடையில் நடைபெற்ற கடும் போட்டி வெற்றி-தோல்வியின்றி முடிவடைந்தது. இப்போட்டியில் இரு கோஷ்டிகளும் தலா ஒரு கோலைப் போட்டன.

இன்றைய
ஆட்டங்கள்

குறூப்:- C. கனடா எதிர் ஹங்கேரி, குறூப்:- D பிரேஸில் எதிர் அல்ஜீரியா, குறூப்:- F. மொரொக்கோ எதிர் இங்கிலாந்து. [வி]

## ஜூன்16 முதல் 26வரை பாடசாலைக்கல்வி கண்காட்சி

(உடுவில்)

ஜூன் மாதத்தில் நடைபெற இருக்கும் பாடசாலைக் கல்விக் கண்காட்சிகளில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் 4ம் ஆண்டு முதல் 13ம் ஆண்டுவரையான சகல வகுப்புக்களும் காட்சிப் பொருட்களை காட்சிக்கு வைக்கவேண்டும் என்று மானிபாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் அறிவித்துள்ளார்.

இவ்விபரங்களையெல்லாம் இம்மாதம் 10ம் திகதிக்கு முன்னர் திரு. இ. யோகசிவன் "யோபல்" சேர்க்குழுங்கை, உடுவில், சுன்னாகம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்றும்வட்டாரக் கல்வி அதிகாரி கேட்டுள்ளார்.

கல்விக்கண்காட்சிகள் ஜூன் மாதம் 16ம் திகதி முதல் 23ம் திகதிவரைஏழாலை, சுன்னாகம், மானிப்பாய், நவாலி, உடுவில் ஆகிய வலய பாடசாலைகளில் நடத்தப்படவுள்ளது. (க)


## ஓராண்டு நினைவஞ்சலி



கந்தையா நித்தியரத்தினம்
(B.Sc Engineering, Peradeniya),
(நிறைவேற்றுப் பொறியியலாளர், ஊர்காவற்றுறை)

இறைவன் படைப்பு: 9-10-1947
ஆள்பவன் அழிப்பு: 18-5-1985
திதி: 6-6-1986

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மகன், உற்றார், உறவினர்.

புங்கைமுத்து ... நிலையம் ...


## இல. இனப்பிரச்னை: இராணுவரீதியில் தலையிடக்கூடாது

[சென்னை]

இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு இந்தியா இராணுவரீதியல் தலையிட வேண்டுமென்று தமிழ்நாட்டிலுள்ள சில பிரிவினர் சக்திகள் கோருவது அபாயகரமானது என்றும் இது ஊக்குவிக்கப்படலாகாது என்றும் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் திரு எம். பக்தவக்சலம் இந்திய அரசிடம் கேட்டுள்ளார். [து]

## கொப்பிளாவத்தை மயானம் புனரமைப்பு

[மாவிட்டபுரம்]

தெல்லிப்பழை தென்மேற்கு கொப்பிளாவத்தை மயானத்தை புனரமைப்புச் செய்ய 25 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

கீரிமலை மசம்பன் வாய்க்கால் மயானத்தை உபயோகித்து வந்த ஏராளமான மக்கள் அங்கு தற்போது இராணுவம் நிலை கொண்டுள்ளதால் மேற்படி கொப்பிளாவத்தை மயானத்தையே நாடுகின்றனர்.

இந்நிலையில் இம்மயானத்தை புனரமைப்புச் செய்ய வேண்டுமென மாவை கிராம அபிவிருத்தி சங்கம் கோரியதைபடுத்து இதற்கென 25 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் மயானம் புனரமைக்கப்படும் அங்குள்ள கிணறும் சீர் செய்யப்படுவதுடன் தங்குமடம் ஒன்றும் அமைக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

## 'அறவழி' பத்திரிகை வெளியீட்டு விழா

[யாழ்ப்பாணம்]

"மனித சமுதாயம் விஞ்ஞான தொழில்நுட்பத்துறைகளிலும், ஏனைய பலதுறைகளிலும் முன்னேறிக்கொண்டிருக்கிற இன்றைய காலத்தில் ஈழத்தமிழர்கள் தினமும் அழிந்துகொண்டே போகிறார்கள்."

இவ்வாறு அறவழிப்போராட்டக்குழுவின் 'அறவழி' பத்திரிகை வெளியீட்டுவிழாவிற்கு தலைமைவகித்துப் பேசிய அறவழிப்போராட்டக்குழு செயலாளர் திரு. க. ஜீவகதாஸ் கூறினார்.

(5ம் பக்கம் பார்க்க)


## இரண்டாவது பிறந்தின வாழ்த்து



செல்வன் உமேஷன் வினோ நாராஜ்

குருநகர், சென்ஜேம்ஸ் கிழக்கு வீதியைச்சேர்ந்த எடிசன்- மெடோனா தம்பதிகளின் செல்வப் புதல்வன் உமேஷன் தனது இரண்டாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் 6-6-86 இன்று கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, மற்றும் உற்றார், உறவினர்கள் அச்-அந்தோனியார் நல்லாசியுடன் பல்கலைகளையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ்க வென்று வாழ்த்துகிறார்கள். (C 2688)

## 3-வது பிறந்தின வாழ்த்து



செல்வி மதுமிதா
6-6-86

ஓட்டுமடம் தேவாலய வீதியைச்சேர்ந்த சரவண பவானந்தன்- பிறேமா தம்பதிகளின் செல்வப் புதல்வி மதுமிதா இன்று (6-6-86) தனது மூன்றாவது பிறந்த தினத்தை கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, ஐயா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சுவிஸ் சித்தப்பா, சித்திமார், அக்காமார், அண்ணன்மார், மச்சாள்மார், மச்சான்மார் சீரும் சிறப்புமாய் வாழ்க வென வாழ்த்துகிறார்கள். (C 2702)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணி வாக்கு

ஒருவன் குரோதத்தை வென்று அதற்குக் காரணமான அறியாமையை அகல ஓட்டி, பிறரிடம் தீமையைக் கவனியாதிருக்கும் நிலையே ஆனந்தநிலை எனப்படும்.

— ஜேம்ஸ் அலன்.

# நமது நோக்கு!

## அணு அழிவைத் தடுக்க மாற்று சக்தி!

அணுவை இரண்டாகப் பிளந்து அதன் சக்தியைக் கண்டுபிடித்தபோது விஞ்ஞான மேதை அல்போர்ட் ஐன்ஸ்ரீன் எவ்வளவு மகிழ்ச்சியடைந்தாரோ அதேவிதமாகப் பன்மடங்கு சோகத்திற்குள்ளானர் அவர் ஹிரோஷிமாவிலும், நாகசாக்கியிலும் அணுகுண்டுகளை அமெரிக்கா வீசியபோது!

20 லட்சம் மக்களை ஒரு சில விநாடிகளில் கொன்று குவித்து பல லட்சம்பேரைக் குற்றுயிராக்கிவிட்ட அந்நிகழ்ச்சியின் நாச விளைவுகளிலிருந்து இன்னமும் உலகம் மீட்சிபெறவில்லை!

ஆயிரக்கணக்கான ஜப்பானியர் அகதிகளாக அமெரிக்காவை நோக்கி ஓடிவர அவர்களை நேரில் சந்தித்துக் கண்ணீர்வடித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார் அணுவிஞ்ஞானி ஐன்ஸ்ரீன். அணுவை அழிவுககு மட்டுமல்ல ஆக்கபூர்வமான செயல்களுக்கும் பயன்படுத்தலாம் என்பது அவரது கருத்தாகவிருந்தது.

கத்தியைக் கொண்டு கத்தரிக்காயை வெட்டலாம் கழுத்தையும் அறுக்கலாம்

அணுவின் அழிவுச் சக்தியைக் கண்டுபிடிக்கு முன் அதன் நாசகார விளைவுகள் பற்றி அவர் சிந்திக்காது போனது துரதிருஷ்டமே!

உலகின் பல பாகங்களிலும் இன்று அணுகுண்டுகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இனி ஒரு உலக யுத்தம் ஏற்படுமானல் அது அணுகுண்டு யுத்தமாகத்தான் இருக்க முடியும் அதுவே உலக முடிவாகவும் அமைந்துவிடலாம்.

இந்த உண்மையை அணுகுண்டுத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள நாடுகள் உணராமல் இல்லை. உணர்ந்த காரணத்தினல்தான் அணு ஆயுதத் தடைபற்றிய ஆலோசனைகள் நடைபெறுகின்றன. இன்னும் புதிதாக வேறு நாடுகளும் இதன் உற்பத்தியில் இறங்கி விடாமலிருக்கவும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. எதுவானலும் ஏற்கனவே அணுகுண்டுகளை அடுக்கி வைத்துக் கொண்டிருக்கும் நாடுகள் மேலும் மேலும் உற்பத்தியை அதிகரித்துக் கொண்டிருக்கும் போது புதிதாக அணுகுண்டு உற்பத்தியில் இறங்கவிரும்பும் நாடுகளை எங்ஙனம் கட்டுப்படுத்த முடியும்.

இன்றுள்ள நிலைமையில் இஸ்ரேல் போன்ற நாடுகளிடம் அணுகுண்டு இருக்குமானல் மத்தியக்கிழக்கின் நிலைமையை எண்ணிப் பார்க்க முடியாது.

இந்நிலையில் அண்மையில் மேற்கு ஜேர்மனியில் கோலோன் நகரில் நடைபெற்ற சர்வதேச மருத்துவர்களின் மகாநாட்டில் இந்த அணு அபாயம்பற்றி ஆராயப்பட்டது குறிப்பிடத்தக்கது. அணுக் கதிரியக்கத்தினல் ஏற்படக்கூடிய விளைவுகள், நோய்கள் முதலியவற்றுக்குத் தேவையான சிகிச்சைகள் பற்றிமட்டுமல்ல, அணு அழிவிலிருந்து உலகைக் காப்பாற்றுவதற்கு மாற்று சக்தியொன்றை உருவாக்குவது பற்றியும் அவர்கள் ஆராய்ந்துள்ளார்கள்.

அணுவின் அபார சக்தியினை உணர்ந்துள்ள விஞ்ஞானிகளினல் மாத்திரமே அதற்கு நேர் எதிர் மாற்று சக்தியொன்றை உருவாக்குவது பற்றி சிந்திகக முடியும் என்றாலும் அப்படியான ஒரு சிந்தனையை உலக மருத்துவர்கள் முன் வைத்திருப்பது வரவேற்கத் தக்கது.

அக்கினியைத் தணிக்க நீர் பயன்படுவது போல் அணுவின் அழிவைத் தடுக்க ஓர் சக்தி இல்லாமலா போகும்? உலக விஞ்ஞானிகள் இதுபற்றி சிந்திக்கும் காலம் வந்துவிட்டது.

## பள்ளிவாசல் மீட்புக்காக துவாப் பிரார்த்தனை

[யாழ்ப்பாணம்]

அகில உலக பைத்துல் முகத்திஸ் குழுவினல் உலகின் சகல முஸ்லீம் பள்ளி வாசல்களிலும் பைத்துல் முகத்திஸ் பள்ளிவ சல் மீட்புக்காகத் துவாப் பிரார்த்தனை ஏற்பாடுகள் நடை பெறுகின்றன.

இப்பிரார்த்தனை [யூன் 5ந் திகதி] ரம்லாம் 27ல் நடாத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் சிவலை பள்ளிவாசலில் தராவிஹ் தொழுகைக்குப் பின்பு அல் அஹாஜ் மௌலவி யூசுப் (ஜமாலி) அவர்களால் பைத்துவ் முகத்திஸ் பள்ளி மீட்புக்காக துவாப்பிரார்த்தனை நடாத்தப்படும். (ஐ)


## விசாரணையின் பின்விடுதலை

(புலோலி)

ஆனையிறவு இராணுவமுகாமில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட கொழும்பில் நிறுவனமொன்றில் கடமையாற்றும் புலோலியைச் சேர்ந்த இளைஞர் எட்டுநாட்களின்பின் விடுதலைசெய்யப்பட்டார்

கொழும்பில் உள்ள நிறுவனமொன்றில் கடமையாற்றும் புலோலியைச் சேர்ந்த இளைஞரான திரு. எஸ். பாலச்சந்திரன் [வயது 25] கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பஸ்ஸில் வந்துகொண்டிருந்த போது கடந்த 18ம் திகதி ஆனையிறவு இராணுவ முகாமில் பஸ்சில் சோதனையிடப்பட்ட போது இவ்விளைஞர் கைதுசெய்யப்பட்டார்.

# ஆசான் அருளால் ஆசானானர்



## மார்க்கண்டு சுவாமிகள் குருபூசை இன்று

பருளாய் விநாயகன்

நாடு நாடாக ஞானவான்களை நாடுதல் நம்மவர்கடன். இந்த வகையில் ஈழநாடு நல்லதோர் ஞானபரம்பரையைத் தனக்கு உரியதாகக் கொண்டு விளங்குகின்றது. இதனை மகாகவி பாரதியார் கூட ஏத்திப் போற்றினர். இன்று அகில உலகெங்கும் ஈழத்து ஞான பரம்பரையின் செயற்பாடுகள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் அமெரிக்காவாய் சைவ ஆதீனப்பணி குறிப்பிடத்தக்கது. ஈழத்து ஞானச்சுடர் உலகெங்கும் ஞானஒளி பரப்பக் காரணமாய் விளங்கியவர்கள் சிவயோக சுவாமிகள் என்பது யாவரும் அறிந்ததே.

சிவயோக சுவாமிகள் நல்லூர்ச் செல்லப்பாச் சுவாமிகளால் தத்துவாதீத நிலை- சமயாதீதநிலை- பேரின்பப் பெருநிலை- எல்லாம் சிவமய மான நிலையைப் பெற்றுர்கள். பெற்ற இடம் நல்லூர்க் கந்தன் தேரடி, அவரின் அநுபவம் நற்சிந்தனைப்பாக்கள்.

யோக சுவாமிகளால் தத்துவாதீத நிலை காட்டப் பெற்றவர்கள் பற்பலர். அவர்களுள் ஒருவரே கைதடியூர் மார்க்கண்டுச் சுவாமிகள் இவ்விருவரின் குரு சீடத் தொடர்பு யோக சுவாமிகளையும் அவர் அருளிய நற்சிந்தனை அமுதினையும் உள்ளவாறு அறிந்து அநுபவிக்கத்துணை புரிவனவாகும் இந்த வகையில் யோக சுவாமிகளை அறிந்து அநுபவிக்க நம்மவர்களுக்கு உறு துணையாக விளங்குபவர் மார்க்கண்டுச் சுவாமிகள்.

''ஆசான் அருளால் ஆசான் ஆனேன்'' என்பது யோக சுவாமிகள் திருவாக்கு. ஆனல் மார்க்கண்டதேசிகர் தம்மை முழுமையாக ஆசானிடத்தே ஒப்படைத்துத் ''தன்னை இழந்து'' ஆசான் ஒருவரையே கண்டிருந்தவர். எந்நேரமும் குருநாமம்! குரு நினைவு! குரு வாக்குப் பாராயணம்- தாமாக ஒன்றைச் சொன்னவரல்லர். மௌன குருவின் மௌன சீடன், மௌன குருவான கதையைத்தான் காண்கின்றோம்.

பூனை குட்டிகளைக் கௌவிக் கொண்டு சென்று பாதுகாக்கும். குரங்கோ அவ்வாறு செய்யாது. குட்டிகளே குரங்கைப் பற்றிச் செல்லும். குரு, சீடரை இவ்விருவகையிலும் ஆட்கொள்வதுண்டு. பூனை குட்டியைக் கௌவுவது போல யோக சுவாமிகள் இவரை ஆட்கொண்டார். இவருக்கென ஞான ஊரைத் தேடினர், ஞான வசிப்பிடத்தைத் தெரிந்தார். ஒத்தாசை உதவி புரியத்தக்க ஞானப்புரவலரை அளித்தார். எல்லாம் ஆசானருளால் இவருக்கு ஏற்பட்டன. யோக சுவாமிகளின் கருணை இருந்தவாறு!

பிரான்பற்றில் 1899ல் பிறந்தவர், 1950ல் கைதடியூர்ச் சுவாமிகளானர், கைதடி ஆசிரமம் 1938ல் ஆரம்பமானது. 1940ல் பால் காய்ச்சப்பெற்றது 194? இல் ஆச்சிரம இல்லத்தில் யோக சுவாமிகள் திருவமுதுண்டார். 1950ல் யோக சுவாமிகளே இவரைக் கைதடி ஆசிரமத்தில் நிலைப்படுத்தினர். மகா சமாதி அடையும் வரை 29 - 05 - 1984) குருநாதன் திருமொழிகளைச் சதா மந்திரித்திக்கொண்டு நிட்டையில் விளங்கினர், இவர்க்குத் தொண்டராகவும் தோழராகவும் வாழும் பேறு பெற்றவர் சாந்தசுவாமிகள்.

இன்று பாடசாலை மாணவர்கள் கடையிற்சுவாமி, யோகசுவாமி, செல்லப்பாச் சுவாமி பற்றிக் கற்கும்பேறு பெற்றுள்ளார்கள். கடையிற் சுவாமி என்றதும் பெரியகடை என விளக்கினேம். மாணவர் ஒருவர்க்கு விளங்கவில்லை. நவீன சந்தை- ''நியூ மார்க்கெட்'' என்றதும் விளங்கியது. இதுபோலச் சந்தைசுவாமி, எங்கள் முன்னுள் தேசாதிபதி சோல்பரிப் பிரபுவிப மகன் என்றல்தான் இளஞ்சந்ததியினர்க்கு உபகாரமாகும். சந்தை சுவாமிக்கும் யோக சுவாமிக்குமுள்ள தொடர்பு ஈழத்து வரலாற்றில் இன்னும் நிலைப்படுத்தப்படவில்லை. ஞானிகளின் வரலாற்று அடிப்படையில் எமது பிரச்னைகளை அலசி ஆராய்ந்து தீர்வுகாண நாம் முயல வேண்டும்.

அன்பர்களை எழிப்படுத்த ஆசான் நற்சிந்தனைகளையே வழங்கினர் மார்க்கண்டுச் சுவாமிகள். அவற்றுட்சில வருமாறு:

',அன்னை, பிதாக் குருவாய் ஐயன் எனை ஆண்டு கொண்டான் என்னை அறிந்தேனடி- கிளியே! இச்சையெல்லாம் போசசுதடி''

''எப்பவோ முடிந்ததென எனக்கு உபதேசஞ் செய்த ஒப்பிலா மாமணியே புறவானை கண் வளராய்,

''சொல்லாலே பயன் இல்லைத் தம்பி, இருந்து பார் தம்பி''

கைதடியில் இன்று மார்ச்கண்டுச் சுவாமிகளின் நினைவாலயமாக விளங்கும் ஆசிரமத்தில் 1953 சிவராத்திரியில் சிவயோக சுவாமிகள் அருளிய 'எல்லாம் சிவமயமே' எனும் நற்சிந்தனையில் ஒரு கண்ணி:

''எட்டாத மனதைக்கட்டி காலாலே கனலை வீசி நிட்டையிலே நான்இருந்தேன் தங்கமே! நீ நான் அங்கு இல்லையடி,''

ஒரு பொல்லாப்புமில்லை எப்பவோ முடிந்த காரியம் மார்க்கண்டுச் சுவாமிகள் போற்றிய யோக சுவாமிகளின் நற்சிந்தனை நமக்கு வழி காட்டுமாக.

## முதல்தடவையாக 20 மாணவிகள் அனுமதி

[கொழும்பு]

மொறட்டுவையில் உள்ள லங்கா ஜேர்மன் தொழில் நுட்பக் கல்லூரிக்கு முதல் முறையாக இவ்வருடம் 20 மாணவிகள் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இவ்வருடம் இக்கல்லூரிக்கு மொத்தமாக 240 மாணவர்கள் பயிற்சிக்கு அனுமதிக்கப் பட்டுள்ளனர். (வா)

## "வடக்கில் நடப்பவற்றை 'சரத்' அறிந்திருந்தார்"

### அஞ்சலிக் கூட்டத்தில் உரை

[கிளிநொச்சி]

"இன்று வடக்கில் என்ன நடக்கிறது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் அரசைக் கேட்கிறுர்கள். இங்கு நடக்கும் பிரச்னைகள் சுதந்திரக் கட்சிக்காரருக்குத் தெரியாமல் இருக்கிறது. ஆனல் அமரர் சரத்முத்தெட்டுவேகமவுக்கு வடக்கின் நிலைபரங்கள். தமிழர் படும் இன்னல்கள் அனைத்தும் நன்கு தெரிந்திருந்தது. அதனல் தான் அவர் எமது மக்களுக்காகக் குரல் எழுப்பினர்',

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் கிளிநொச்சி மாவட்டக் கிளையினர் தோழமைத் தொழிற் சங்கங்களுடன் இணைந்து நடத்திய அமரர் சரத்முத்தெட்டுவேகமவின் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் முன்னுள் பிரசைகள் குழுவின் செயலாளர் சட்டத்தரணி ரி, ஸ்ரீஸ்கந்தராசா கூறினர்

கிளிநொச்சி கனகாம்பிகைகுளம் வித்தியாலயத்தில் இ. தொ. காங்கிரசின் கிளிநொச்சி மாவட்டத் தலைவர் கோ. செல்வபதி தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

சட்டத்தரணி ஸ்ரீஸ்கந்தராசா மேலும் பேசுகையில்: அவசரகாலச் சட்டத்தை பாராளுமன்றத்தில் தொடர்ந்து எதிர்த்து வந்த அமரர் சரத்முத்தெட்டுவேகம பாராளுமன்றத்தில் அரசு கொண்டு வந்த சட்டம் ஒன்றை ஒரே ஒரு தடவை ஆதரித்து அரசுடன் சேர்ந்து வாக்களித்துள்ளார் என்றும் அந்தச்சட்டம் இந்திய தோட்டத் தொழிலாளர்களுக்கு வாக்குரிமைச் சட்டமாகும் என்றும் கூறினர்.

வண.பிதா எஸ். ஜோன் கௌரிகாந்தன், டாக்டர் கே வி. கே. திருலோகமூர்த்தி, இலங்கை ஆசிரியர் காங்கிரசைச் சேர்ந்த பொன். தில்லைநாயகம், பத்திரிகையாளர்கள் திருவாளர்கள் ரி. எஸ். தர்மகுலசிங்ம், மு. விவேகானந்தன், பாரதிபுரம் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் எம். கணபதி உ. செல்வராசா, சு. சிவநாதன், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சி. பாலசிங்கம், பி. சக்திவேல் ஆகியோர் உரைநிகழ்த்தினர்கள். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘எமது நிலையான சொத்துக் கல்வியே’

[யாழ்ப்பாண ]

‘‘எமக்கு நிலையாகவுள்ள பெருஞ்சொத்துக் கல்வியே என்ன இடர்கள், இக்கட்டுகள் ஏற்பட்டாலும் அவற்றையெல்லாம் வென்று நாம் தொடர்ந்து கல்வி பயிலவேண்டும். இடையிடையே ஏற்படுகின்ற சில சலசலட்புகளினுல் மனம் சோர்ந்து நாம் கல்வி முயற்சிகளை விட்டுவிடலாகாது’’.

இவ்வாறு யாழ். நாயன்மார் கட்டு மகேஸ்வரி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகளில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு இ சுந்தரலிங்கம் கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

‘‘உறுதியன உடலும் உறுதியான மனமும் இன்று மிகமிக அவசியமாகவுள்ளன. உறுதியான உடலிலேதான் உறுதியான மனம் உருவாகும். உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை என்று கூறச்கூடிய மனஉறுதி எமக்குத தேவைப்படுகிறது எனவே மாணவர்கள் விளையாட்டின் மூலம் உடலையும் உளத்தையும் உரமாக்கிக்கொள்ளவேண்டும்.’’

பாடசாலை அதிபர் திரு சி மு. கந்தையா தலைமையில் நடைபெறற இவ்விழாவில் நல்லூர் வட்டாரசகல்வி அலுவலர் திரு. சு. சிவநாயகமூர்த்தி அலுவலகக் கல்வி அதிகாரி திரு. க.மகேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றினர்.

திரு. சு. சிவநாயகமூர்த்தி பலஆண்டுகளுக்குப் பின்னர் நெருக்கடி மிக்க நிலையிலும் சிறப்பாக விளையாட்டுப்போட்டியை நடத்திய அதிபரைப் பாராட்டினுர்.

பச்சை, சிவப்பு; மஞ்சள், இல்லங்களுக்கிடையே நடைபெற்ற மெய்வல்லுநர்போட்டிகளில் பச்சை இல்லம் 308 புள்ளிகளுடன் முதலித்தையும் மஞ்சள் இல்லம் இல்லம் 300 புள்ளிகளுடன் இரண்டாமித்தையும் பெற்றன.

# “வெளிநாடு செல்வோருக்கு ஆங்கில அறிவு அவசியம்”

[யாழ்ப்பாணம்]

கல்லூரிகளில் மாணவர் மன்றங்கள் இயங்கமுடியாத இக்கட்டான சூழ்நிலையில் தனியார் கல்வி நிறுவனங்களில் மாணவர் ஒன்றியங்கள்நிறுவப்பட்டுச் செயற்படுவது மிகவும் பாராட்டிற்குரியது எமதுமாணவர்கள் எவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியிலும் தமதுஆங்கில அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.’’

இவ்வாறு எழுத்தாளர் நெல்லை க. பேரன் நெல்லியடி மொடேர்ன் கல்விநிலையமாணவர் ஒன்றியத்தினுல் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் சிறப்புச் சொற்பொழிவாளராகக்கலந்து கொண்டு பேசுகையில் கூறினுர்.

அவர் மேலும் கூறியதாவது; மத்திய கிழக்கு நாடுகளுக்கும் வேலை தேடிச் செல்லும் எமது இளைஞர்களும் யுவதிகளும் விமானப் பயணத்தின் போது அவசியமான பிரயாணப் பத்திரங்களை நிரப்புவதற்கு மொழி தெரியாமல் கஷ்டப் படுகிருர்கள். வர்கள் வேலைக்குச் செல்லும் கம்பனிகளின் நிர்வாகிகள் பெரும்பாலும் ஆங்கிலேயர்கள் அல்லது அமெரிக்கர்களாக இருக்கிருர்கள். தங்களுடைய வேலை சம்பந்தமான அல்லது தனிப்பட்ட பிரச்னைகளையும் குறைபாடுகளையும் இந்த நிர்வாகிகளிடம் தெளிவாகச் சொல்வதற்கு ஆங்கில அறிவு மிகவும் அவசியம். நல்ல ஆங்கில அறிவு உள்ளவாகள் சாதாரண வேலைகளில் சேர்ந்து பிறகு படிப்படியாகப் பதவி உயர்வுகளைப் பெறும் வாய்ப்புகள் அதிகம்.’’

மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளின் கவிதா நிகழ்வு, பாடல் முதலிய நிகழ்ச்சிகளும் வர்த்தக ஆசிரியர் திரு. இ. இரத்தினத்தின் பேச்சும்இடம் பெற்றன.

இக்கூட்டத்திற்கு மாணவர் ஒன்றியத் தலைவி செல்வி பி. குமுதினி தலைமை வகித்தார். மன்றச் செயலாளர் செல்வன் ச. செல்வானந்தன் நன்றி கூறினுர். [க]

# குடும்பநலத் தொண்டர் பயிற்சி வகுப்புகள்

(வவனியா)

வவனியா மாவட்ட திட்டப் பிரதேச பிரிவினுல் தெரிவு செய்யப்பட்ட சுமார் 50 குடும்பநல தொண்டர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் வவனியாவில் நடைபெற்றன.

இலங்கைக் குடும்பத்திட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் இப்பயிற்சி வகுப்புக்கள் இடம் பெற்றன.

பெரிய கோமரசன்குளம், கணேசபுரம், ஓமந்தை திட்டப்பிரதேச தொண்டர்களுக்கே இப்பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டதாக குடும்பநலத்திட்ட அதிகாரி திரு, பி. சிவகாந்தன் தெரிவித்தார்.

வவனியா மாவட்ட குடும்பநல தலைவர் திரு. ஆர், வி. வில்வராஜா, தவித்திட்டப் பணிப்பாளர் திரு. ரீ. துரைசிங்கம், முல்லைத்தீவு மாவட்ட குடும்பநலத்திட்ட அதிகாரி திரு. ஏ. அன்பானந்தன், மன்ஞர் மாவட்ட குடும்பநலத் திட்ட அதிாரி திரு. எஸ். விஜயகுமார் ஆகியோர் கருத்தரங்கில் பேசினுர்கள்.

# கிளிநொச்சி கல்விக்கந்தோரில் சகலகொடுப்பனவுகளும் வழங்க ஏற்பாடு

[கிளிநொச்சி]

ஆசிரியர்களின் சம்பளக் கொடுப்பனவுகளை மட்டும் இதுவரையும் வழங்கிவந்த கிளிநொச்சி கல்வித்திணைக் களத்தில் ஏனைய கொடுப்பனவு வேலைகளும் ஆரம்பமாகியுள்ளன.

ஆசிரியர்களது சம்பளக் கொடுப்பனவுகள் தவிர்ந்த சகல கொடுப்பனவுகளும் யாழ். கல்வித் திணைக்களத்தி லேயே இதுவரை நடைபெற்றுவந்தது. இதனுல் கிளிநொச்சி கல்வித்திணைக் களத்தினுல் மேற்கொள்ளப் பட்டுவந்த பல வேலைகள் பாதிப்படைந்து வந்தன.

இதனைத் தொடர்ந்து மாவட்ட கல்விப்பணிப்பாளர் ஜனுப் எம். எம். மன்சூர் கல்விஅமைச்சுடன் தொடர்பு கொண்டு சகல கொடுப்பனவுகளையும் கிளிநொச்சியில் வழங்க ஒழுங்குகள்செய்துள்ளார். [க]

## இரத்தம் சேகரிக்க ஏற்பாடு

[சாவகச்சேரி]

அடிக்கடி இடம்பெறுகின்ற விமானத் தாக்குதல், ஷெல் தாக்குதல்கள் காரணமாகக் காயப்படுகிறவர்களுக்கு இரத்தம் தேவைப்படுவதால் பாரிய அளவிலான இரத்தம் சேகரிக்கும் பணியொன்றினை மேற்கொள்ள சாவகச்சேரி இளைஞர் நல்வாழ்வுக் கழகத்தினர் முன்வந்துள்ளனர்.

மக்களின் பொதுநன்மை கருதியும், உயிர் பாதுகாப்புக் கருதியும் இரத்ததானம் செய்ய விரும்புவோர் இக்கழகத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்ளலாமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்கள் ஒற்றுமைக்கு பாராட்டு

(சாவகச்சேரி)

‘‘சாவகச்சேரித்தொகுதியில் அபிவிருத்தியடைந்துவருகின்ற கிராமங்களில் ஒன்ருகவுள்ள நவபுரத்தில் வாழ்கின்ற மக்கள் மத்தியில் நிலவுகின்ற ஒற்றுமையும், ஐக்கியமும் ஏனையகிராமங்களுக்குமுன்மாதிரியாக இருப்பது குறித்து பகிழ்ச்சியடைகிறேன். இக்கிராமத்தில் நடாத்தப்பட்ட விளையாட்டுப்போட்டியின் நிர்வாகம், கட்டுப்பாடு என்பன பாராட்டப்படத்தக்கதாகும்.’

இவ்வாறு நவபுர சனசமூக நிலையத்தின் விளையாட்டுப் போட்டியில் வேற்றியீட்டியவர்களுசகு பரிசில் வழங்கிய வைபவத்தில் பிரதம விருந்தினராகப் பங்குகொண்ட விசேட சேவை அலுவலர்கள் சங்கத்தின் தலைவரும், அறவழிப்போராட்டக் குழுவின் இயக்குநருமான திரு. வீ. எஸ் துரைரஜா விளையாட்டு வீரர்கள் மத்தியில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

நிலைய இயக்குநர் திரு எஸ். தங்கராசா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தின் போது சாவகச்சேரி மக்கள் வங்கி ஊழியர் திருமதி ஈஸ்வரி ஜீவகதாஸ் பரிசில்களை வழங்கினுர்.

## இன்றைய பலன்

மாதம் வைகாசி
திகதி; 23 (1986-6-6)
கிழமை: வெள்ளி
திதி: சதுர்த்தசி பி.ப.வரை
நக்ஷத்திரம் - கார்த்திகை
மு. இ. வரை

மேடம்: துன்பத்தின் ரேகை படரும் எதிலும் தயக்கம் ஏற்படும். ஆதரவு கொடுத்தவரே முடிவில் கையை விரிக்கக்கூடும்

இடபம்: மனப்போராட்டம் அதிகரிக்கும். உறவினர் ஒருவர் மீது ஆத்திரம் பிறக்கலாம். உடல்நலமும் பாதிக்கப்படும்.

மிதுனம்: குடும்பத்தில் குதூகலநிகழ்ச்சிகள் இடம் பெறும். பொருளாதாரத்துறையில முன்னேற்றம் காணப்படும், பேச்சில் நிதானம் நன்று.

கடகம்: அவசரப்போக்கு சிக்கலைத் தோற்றுவிக்கும். மனதில் விரக்திதோன்றும். வீஞனசிந்தனையால் சோர்வு தென்படும்.

சிங்கம்: வியாபாரத்துறையில விருத்தியுண்டு. செய்தொழில் சிறப்படையும். வாழ்க்கையில் சுமுகமானநிலை தென்படும்.

கன்னி: புரட்சிகரமான நிலையை விரும்புவீர்கள் வாழ்க்கையில் எதிர்நீச்சல் போடுவதில் ஆர்வம் பிறக்கும். உணர்ச்சியமயமானதினம்.

துலாம்: நம்பிக்கை மோசடி நடக்கும். நண்டர் ஒருவர் உமதுகாலை வாரிவிடுவார். மசபலவீனங்களைக் கட்டுப்படுத்திக்கொள்ளவும்.

விருச்சிகம்; வெற்றி உமதருகில விரைந்து வரும். எதிர் பார்த்தவர்களே ஆதரவுதருவார்கள். களஸ்திர சுகமும் உண்டு.

தனுசு: தொழில்துறையில் நஷ்டத்திற்கு இடம் உண்டு. புதிய முதலீடுகளை ஒத்திவைக்கவும் நண்பனின் கடிதம் வேதனைதரும்.

மகரம்: கலைஞர்கள் போற்றப்படுவார்கள். வெளியூரிலிருந்து அழைப்புக் கிடைக்கலாம். பிதாவழிச்சுகமும் உண்டு.

கும்பம்: இதமானவாழ்வு இன்சொல் இவற்றுடன் பெரியயோர்களின் ஆதரவும் உண்டு. தொழிலாலும் சிறப்புண்டு.

மீனம்: இலட்சியப்பாதையை நோக்கி இன்று பயணம் ஆரம்பமாகும். பொருள்வரவும் உண்டு. தரமானதினம்.

திருமலை ரவீந்திரன்


# பவர்ஸ்
## வீட்டுத் தோட்ட உரவகைகள்




தேவையான விசேட உரத்தின் இலக்கத்தைக் குறிப்பிட்டுப் பெறுங்கள்.

இல. 1. தாவர A வர்க்கம்
இல. 2. தாவர B வர்க்கம்
இல, 3. பழ மரங்கள்
இல. 4. கிச்சிலி மரங்கள்
இல. 5. வாழை, அன்னுசி
இல. 6. விசேட பப்பாசி
இல. 7. விசேட உருளைக்கிழங்கு
இல. 8. விசேட மிளகாய்
இல. 9. விசேட வெண்காயம்
இல. 10. மலர் – பொது
இல. 11. விசேட புற்றரை
இல. 12. ருேசா – செவ்வரத்தம்பூ
இல. 13. அந்தூரியம், பெக்கோனியா
இல. 14. மலர் – ‘‘விசேடம்’’
இல. 15. விசேட வெற்றிலை
இல. 16. விசேட திராட்சை
இல. 17. விசேட ஸ்ரோபறி
இல. 18. தெங்கு, செவ்விளந்தென்னை விசேட உரம்

ABC
ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
தபாற்பெட்டி இல. 11 கொழும்பு.

MASTERS ABC 2/83

(A-471)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 பேர் ..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வழிமறிக்கப்பட்டு அதில் பிரயாணம் செய்த 12 பேர் குண்டர் கோஷ்டியினரால் வெட்டிக்கொலை செய்யப்பட்டதாகவும் 42 பேர் காயமடைந்தாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில், வவனியாவிலிருந்து திருகோணமலைக்கு முற்பகல் ஒரு மணிக்கு புறப்பட்டுச் செல்லும் பஸ் வண்டியே இலக்கானதாக தெரிவிக்கப்பட்டது. அத்துடன் இந்த பஸ்வண்டியில் பயணம் செய்த ஏனைய பிரயாணிகளின் விபரம் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை

வவனியாவிலிருந்து புறப்பட்டுச்செல்லும் திருகோணமலை பஸ் வண்டி வழமையாக மதவாச்சி, மிகிந்தலை ஹபரனை ஊடாகத் திருகோணமலை செல்வது வழக்கம் என்று தெரிவிக்கப்பட்டது. [பி]

## அறவழி.,..

(2ம் பக்கத் தொடர்ச்சி)

'அறவழி' பத்திரிகையின் முதல் பிரதியை கைதடி கலைவாணி வித்தியாலய அதிபர் திரு. நா. கந்தையா பெற்றுக் கொண்டார்.

பண்டிதர் செ. சிவலிங்கம், திரு. ஏ, கே இராமலிங்கம், திரு. சு நடேசபிள்ளை, திரு கே. ஜீ. தங்கவேல், திரு க. இளையதம்பி ஆகியோரும் இவ்விழாவில்உரையாற்றினார்கள். [ஐ-க]


### கடைசிநேர வரிவிளம்பரம்

### காணவில்லை

V. அப்புத்துரை 29. பசார் ஒழுங்கை யாழ்ப்பாணம் எனது வீட்டில் Sony T. V கலர் 20 No 266703 டெக் (சமறு) Akai 29 - 05 - 86 இரவு களவாடப்பட்டது இது பற்றி தகவலை மேற்கண்ட விலாசத்துக்கு அறிவிக்கவும் இப்பொருளை யாரும் விலைக்கு வாங்க வேண்டாம் என்றும் எச்சரிக்கிறோம். தகவல் தருபவருக்கு உகுந்த சன்மானம் தாரப்படும். (C. 2734)

**லிடோ**
காலை 10-30 2-30, 6-30
கமல்-ரஜனி-ஸ்ரீதேவி-ஜெய்கணேஷ்-நாகேஷ் நடித்த
**தாயில்லாமல் நானில்லை**
(கலர்)

**வெலிங்டன்**
10-30, 2-30, 6-15
மோகன் - பூர்ணிமா - சுஜாத்தா-ஜெய்சங்கர் நடித்த
**விதி**
(கலர் - புதிய பிரதி)

**லிபேட்டி சினிமாவில்**
[வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்]
Jim Brown நடித்த
**Dack of the Sun**
பொம்பர்தாக்குதல், பயங்கர இராணுவ அணிகளின் தாக்குதல்களின்மத்தியில் பெரிய தொகையான வைரங்களைக்கடத்தும்பயங்கர யுத்தப் படம்.


# செஞ்சிலுவைச் சின்னம் பொறிக்குமாறு சுற்றறிக்கை

[பண்டத்தரிப்பு]

யாழ் மாவட்டத்திலுள்ள சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களின் கட்டிட கூரைகள் மேலும் மற்றும் அரசங்க வைத்தியசாலைகள், அரசினர் மத்திய மருந்தகங்கள் ஆகியவற்றின் கூரைகள் மீதும் உடனடியாகச் செஞ்சிலுவைச் சின்னம் பொறிக்கப்படவேண்டும் என்று யாழ் பிரதேசசுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிப்புரை வழங்கியுள்ளார்,

வானத்தாக்குதல் நடைபெறும் போது சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களிம் மற்றும் அரசினர் வைத்தியசாலைகளும் தாக்கப்படாத வகையிலேயே இந்தஅறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான சுற்றறிக்கையொன்று யாழ் மாவட்டத்திலுள்ள சகல அரசினர் வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகளுக்கும் மற்றும் சுகாதார நிறுவனங்களின் தலைவர்களுக்கும் இவ்வாரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## வவனியாவில் 250 பேர் கைதாகி விடுதலை

[வவனியா]

வவனியா கண்டி வீதி உட்பட மன்னார் 2ம் கட்டைப் பகுதியை நேற்று அதிகாலை சுற்றிவளைத்த சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் அப்பகுதியைச் சேர்ந்த சுமார் 250 பொதுமக்களை விசாரணைக்காகக் கொண்டு சென்று பின்னர் விடுதலைசெய்தனர்

நேற்று அதிகாலை கவச வாகனங்கள் சகிதம்வந்த இராணுவத்தினர் தோணுக்கல்லு, வைரவர் புளியங்குளம், பண்டாரிக்குளம், வேப்பங்குளம் ஆகிய பகுதிகளைச் சுற்றி வளைத்து காலை 8 மணிவரை தீவிர தேடுதல் நடவடிக்கையில் இறங்கியிருந்தனர்.

## திருமலை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பேர்கொண்ட கூட்டமொன்று இந்த 4ம் கட்டைப்பகுதியில் ஆயுதங்களுடன் நின்று பஸ் பயணிகளைத் தாக்கியதைக் காணமுடிந்ததென்றும், சுமார் 50 பயணிகள் இங்கு கடத்திச் செல்லப் பட்டனரென்றும், இதுவரை அவர்கள் பற்றிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது, ஊர்காவல் படையினர்க்கு அண்மையில் வழங்கிய ஆயுதங்களுடனேயே இம் முகமூடி நபர்கள் காணப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. [மா]

## கிளிநொச்சி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப் பட்டதுடன், 'ஷெல்'களும் பிரயோகிக்கப் பட்டன.

இத்தாக்குதலால் பொதுமக்கள் தரப்பில் எண்ணிக்கை தெரியாதளவு உயிர்ச் சேதம் ஏற்பட்டன. படுகாயமடைந்தோர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல முடியாதளவுக்குக் காடுகளுக்குள் கிடப்பதாகத் தெரியவருகிறது. வீடுகள்: கடைகள் சேதமாகியுள்ளன.

### ஆனையிறவில்

இது இவ்வாறிருக்க நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் ஆனையிறவு முகாமிலிருந்து ஆயுதப் படையினர் வெளி வந்த பொழுது போராளிகள் சிலிண்டர்கள கொண்டு குண்டுத் தாக்குதல் மேற்கொண்டனர். இம் மோதலில் படையினர் தரப்பில் சேத மேற்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இத்தாக்குதலையடுத்து முகாமுகத்துள் திரும்பிச் சென்ற படையினர் மோட்டர் 'ஷெல்'களை பிரயோகித்தனர். பின்னர் அங்கும் விமானக் குண்டு வீச்சு இடம்பெற்றது. பொதுமக்கள் தரப்பில் அதிக சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற கிளிநொச்சி முகாம் தாக்குதல் சம்பவத்தின்போது, 'ஆட்லறி' ஷெல் தாக்குதலில் கிளிநொச்சி டிப்போ சந்திக்கு முன்னால் உள்ள வீடு சேதமடைந்ததுடன் 4 குழந்தைகள் பலியானார்கள்; 2 குழந்தைகள் படுகாயமடைந்தனர்

கிளிநொச்சியில் இடம் பெற்ற விமானக்குண்டு வீச்சில் பல வீடுகள் சேதமடைந்தன. பலர் பலியானார்கள், 40 க்கு மேல் படுகாயமடைந்தனர்.

முறிகண்டிப் பிள்ளையார் கோவில் பகுதியில் இடம் பெற்ற விமானக்குண்டுவீச்சில் கடையொன்றிலிருந்த இருவர் பலியானார்கள். இருவர் படுகாயமடைந்தனர். [மா]


## இடமாற்றம்

பாதுகாப்பும் அமைதியுமான சூழலுக்கு எமது ஸ்தாபனம் தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதென்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம்.

புதிய விலாசம்:-

**வீடியோ பிரசாத்,**
(மனோகரா தியேட்டர் சந்தியிலிருந்து 100 யார் தூரம்)
631, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

100 LOVE BIRDS
கூட்டுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு கொள்க:
**வீடியோ பிரசாத்,**
(மனோகரா தியேட்டர் சந்தியிலிருந்து 100 யார் தூரம்)
631, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ். அபி. சபையால் 1986ம் ஆண்டு ஜூன் மாதம் இருபத்துமூன்றும் திகதி (23-06-86) முற்பகல் 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைகட்கும் எதிரேயுள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடியதொகைக்கு கட்டிடவேலைகள் செய்வதற்கென கல்வித் திணைக்களம், கட்டுவேலைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கட்டிட திணைக்களம், உள்ளூராட்சி திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1986ம் ஆண்டு ஜூன் மாதம் இருபதாம் திகதி பி. ப. 2-00 மணிவரை (20-06-86) மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணமாக ரூபா ஐம்பதும் (ரூ. 50/-) மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணமாக ரூபா இருநூற்றி ஐம்பதும் (250/-) செலுத்தியதன் பேரில் கேள்விப்பத்திரங்கள் யாழ். அபி. சபை தலைமை அலுவலகத்தில் (கச்சேரி) வழங்கப்படும். கேள்விப்பத்திரப்பணம், கேள்வி வைப்புப் பணம் ஆகியன காசுக்கட்டளையாகவோ அல்லது வங்கிக்கட்டளையாகவோ செலுத்தப்படவேண்டும்.

கேள்விகள் 1986ம் ஆண்டு ஜூன் மாதம் 23ம் திகதி காலை 10-30மணிக்கு யாழ். அபி சபை தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்வி காரர் சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களை யாழ். அபி. சபை தலைமை அலுவலகத்தில் அல்லது யாழ். கல்வித்திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வை. மு. பஞ்சலிங்கம்,
மாவட்டச் செயலாளரும்,
அரசாங்க அதிபரும்,
யாழ். மாவட்டம்.

யாழ். அபி. சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
1986-06-04.

| | பாடசாலையின் பெயர் | விபரணம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 01. | யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம் | மேல்மாடி-படி-1 48' 9'' x 25' 0'' | 225,000.00 |
| 02. | யா/காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயம் | மேல்மாடி-படி-2 68' 9'' x 25' 0'' | 200,000.00 |
| 03. | யா/சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம் | மேல்மாடி-படி-2 110' 0'' x 25' 0'' | 250,000.00 |
| 04. | யாழ்/சாந்தை சிற்றம்பலம் வித்தியாலயம் | பாடசாலைக் கட்டிடம் 100' 0'' x 20' 0'' | 200,000.00 |
| 05. | யா/மாதகல் சென், ஜோசப்ம வித்தியாலயம் | பாடசாலை கட்டிடம் 100' 0'' x 20' 0'' | 200,000.00 |
| 06. | யா/மயிலிட்டி றோ.க.த.க. பாடசாலை | மேல்மாடி-படி-1 48' 9'' x 25' 0'' | 200 000.00 |
| 07. | யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியா. | மேல்மாடி-படி-1 68' 9'' x 25' 0'' | 275,000.00 |
| 08. | யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம் | மேல்மாடி-படி-2 68' 9'' x 25' 0'' | 175,000.00 |
| 09. | யா/நெல்லியடி ம.ம.வித்தி. (மகளிர்பிரிவு) | மேல்மாடி-படி-2 68' 9'' x 25' 0'' | 200,000 00 |
| 10. | யா/வட இந்துமகளிர்கல்லூரி | மேல்மாடி-படி-1 130' 0'' x 25' 0'' | 450,000.00 |
| 11. | யா/யாழ்ப்பாணம்இந்துஆரம்ப பாடசாலை | மேல்மாடி-படி-2 48' 9'' x 25' 0'' | 175 000.00 |
| 12. | யா/கொக்குவில் இந்துகல்லூரி | மேல்மாடி-படி-1 40' 0'' x 40' 0'' | 350,000.00 |
| 13. | யா/வேம்படி மகளிர் உயர்தர கல்லூரி | மேல்மாடி-படி-3 110' 0'' x 25' 0'' | 375,000.00 |
| 14. | யா/ஆங்கில கொன்வென்ற் | மேல்மாடி-படி-1 20' 0'' x 25' 0'' 68' 9'' x 25' 0''படி-11 | 275,000.00 |
| 15. | யா/நாவலர் ம.வித்தி | மேல்மாடி-படி-2 90' 0'' x 25' 0'' | 350,000.00 |

[A-816]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வெள்ளிக்கிழமை 6-6-86

### ஊரடங்குச் சட்டம்

கிளிநொச்சிப் பகுதியில் நேற்றுமாலை 2மணிக்கு ஊரடங்குச் சட்டம் மீண்டும் அமுலுக்கு வந்தது.

இன்றுகாலை 9மணிவரை இச் சட்டம் அமுலிலிருக்குமென்று பாதுகாப்பமைச்சு அறிவித்தது. [ப]

## மயிலிட்டி ரூரிஸ்ட் ஹோட்டல் தகர்ப்பு!

[யாழ்ப்பாணம்]

மயிலிட்டிக் கடற்கரையிலுள்ள டூரிஸ்ட் ஹோட்டல், இராணுவத்தளமாக்க முயற்சித்ததைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் தமது இயக்கத்தினரால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டதாக 'தமிழ் ஈழ இராணுவம்' அறிவித்துள்ளது. [மா]



வடபிரதேச தொழிற்சங்கங்களும், அனைத்து வெகுஜன அமைப்புகளும் இணைந்து நேற்று யாழ். நகரில் நடத்திய மாபெரும் ஊர்வலத்தின்போது எடுக்கப்பட்ட படம். (படம்: தேவா)

### நாச்சிமார் கோயிலடியிலிருந்து—

# யாழ். நகர வீதிகளூடாக நீண்ட பெரும் ஊர்வலம்

[யாழ்ப்பாணம்]

தமிழ்பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கு எதிரான போராட்டத்திற்கான இணைப்புக் குழு நேற்று யாழ். நகரில் நடத்திய பிரமாண்டமான ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

வட பிரதேச தொழிற்சங்கங்களும், அனைத்து வெகுஜன அமைப்புகளும் இணைந்து நடத்திய இவ்வூர்வலம் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியிலிருந்து நேற்றுக் காலை பத்து மணிக்கு ஆரம்பமானது.

ஊர்வலம் காங்கேசன்துறை வீதி வழியாக சிவன்கோவிலை அடைந்து, கன்னாதிட்டி வீதி, கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதி வழியாக யாழ். செயலகம் மண்டபத்தை நண்பகல் 12-00 மணிக்குச் சென்றடைந்தது.

இந்த ஊர்வலத்தில் கீழ்வரும் சுலோகங்கள் எழுப்பப்பட்டன:-

* வைத்தியசாலையிலும் குண்டுவீச்சா? நோயாளிகளும் பயங்கரவாதிகளா?

* பாடசாலைகளைப் படைமுகாமாக்காதே; பள்ளிப் பிள்ளைகளைப் பலியெடுக்காதே.

* போக்குவரத்தைத் தடை செய்யாதே; பட்டினி போட்டாலும் பயப்படமாட்டோம்.

* விளை நிலத்தை அழிக்காதே; விளையும் பயிரை எரிக்காதே.

* மக்கள் சக்தி மாபெரும் சக்தி போன்ற சுலோகங்களை கோஷித்தவண்ணம் வெய்யிலையும் பொருட்படுத்தாமல் ஆயிரக்கணக்கில் ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். [வா]

## துப்பாக்கிச்சூடு காயமடைந்தவர் மரணம்

[யாழ்ப்பாணம்]

கடந்த திங்கட்கிழமை கோட்டையிலிருந்து பிரதான வீதியை நோக்கி நடாத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த சுழிபுரத்தைச்சேர்ந்த சுப்பையா இராமலிங்கம் [வயது 45] நேற்று இரவு யாழ் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

இவர் தமது சொந்த அலுவல் காரணமாக யாழ். நீதிமன்றத்திற்கு செல்லும் பொழுதே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். [ரா]

## கடற்படை சுட்டு மீனவர் பலி

(யாழ்ப்பாணம்)

நேற்று அதிகாலை நான்கு மணியளவில் பருத்தித்துறை கடலில் மீன் பிடிக்கபடகில் சென்ற மணல் காட்டைச் சேர்ந்த இரு மீனவர்கள் மீது ரோந்து சுற்றி வந்த கடற்படையினர் சுட்டதில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றவர் காயமடைந்தார்.

இவர்கள் இருவரும் கரையிலிருந்து ஒன்றரைமைல் தூரத்தில் வலை போட்டுவிட்டு இருந்தபோதே கடற்படையினர் சிறிது தூரத்திலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அப்போது பயத்தில் படகினுள் ஒளிந்த போது பிலிப்பையா ரிச்செட் ஞானதாஸ் [வயது 21] என்பவர் கொல்லப்பட்டார். கீத பொன் கலன் [வயது 32] காயத்துடன் கடலில் குதித்து உயிர் தப்பினார்.

தப்பி வந்தவர் ஏனையவர்களின் உதவியுடன் இரண்டு கட்டுமரத்தில் சென்று இறந்தவரின் சடலத்தை படகினுள்ளிருந்து மீட்டார். இந்தப்படகு குண்டுகள் துளைத்ததினால் பெருமளவு சேதமடைந்துள்ளது. [சிவ]

## யாழ். நகர மத்தியில் போராளிகள் நினைவுச்சுடர்

[யாழ்ப்பாணம்]

தமிழீழ மாணவர் பேரவையினரால் நேற்று நடாத்தப்பட்ற "போராளிகள் தினம்" உரும்பராய்ச் சந்தியிலுள்ள சிவகுமாரன் சிலை அமைக்கப்பட்டுள்ள மைதானத்தில் ஆரம்பமானது

உரும்பராய்ப் பகுதியிலுள்ள கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. வாழை, தோரணங்கள், கறுப்புக் கொடிகள் வீதிகளில் கட்டப்பட்டிருந்தன.

சிவகுமாரனின் தந்தை திரு. பொன்னுத்துரை, மெழுகுவர்த்தியை ஏற்றி வைத்து போராளிகள் தினத்தை ஆரம்பித்துவைத்தார்.

தமிழீழ மாணவர் பேரவையைச் சேர்ந்த மாணவர்கள் வெள்ளைச் சீருடைகளுடன் கறுப்பு, சிகப்பு பட்டி தரித்து அணி வகுத்து நின்று மரியாதை செலுத்தினார்கள். துப்பாக்கிவேட்டுக்கள் தீர்க்கப்பட்டும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

உருப்பராய் பகுதியில் உள்ள பாடசாலை மாணவ, மாணவியர் அஞ்சலி செலுத்த பெரும் தொகையாக வந்திருந்தனர்.

"அஞ்சலி நிகழ்ச்சியைத் தொடர்ந்து விடுதலைச் சுடரினிலே விடியலுக்கோர் செய்தி" என்ற தலைப்பிலான அறிக்கை தமிழீழ மாணவர் பேரவைத் தலைவரால் வாசிக்கப்பட்டது.

போராளிகள் நினைவாக ஈழத்துக் கவிஞர்களால் இயற்றப்பட்டு பாடப்பட்ட அஞ்சலிக் கீதங்களும் ஒலிபரப்பப்பட்டன.

இதனையடுத்து சீருடை தரித்த மாணவர் பேரவை உறுப்பினர்கள் பின் தொடர அணையாத தீப ஒளிச்சுடரை ஏந்தியவாறு போராளிகள் தின ஊர்வலம் யாழ் நகரத்தை நோக்கிப் பலாலி வீதியால் புறப்பட்டது.

யாழ் புதிய சந்தைக்கு முன்பாகவுள்ள ஆஸ்பத்திரி வீதியில் அமைக்கப்பட்டிருந்த போராளிகள் நினைவுத் தூபி முன்பாக ஊர்வலம் வந்தடைந்ததும் அங்கும் மரியாதை அணிவகுப்பு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து அணையாத தீப ஒளி அத் தூபி மீது ஏற்றி வைக்கப்பட்டது.

போராளிகள் தினம்5 நாட்களுக்கு அனுஷ்டிக்கப்படவுள்ளதால் இததீப ஒளி [நேற்றிலிருந்து] 5 நாட்களுக்குத் தொடர்ந்து எரியும் எனத் தமிழ் ஈழ மாணவர் பேரவையினர் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் திங்கட்கிழமை போராளிகள் நினைவாகச் சகல பாடசாலைகளிலும் செய்தி அறிக்கைகள் வாசிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. உனினும் பாடசாலைகள் வழமபோல இயங்குவதில் மாற்றமில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. [கை]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூன் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126,

## யாழ் அரச...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ர்பு அதிகாரியும் மற்றும் இரு உத்தியோகத்தர்களும் லொறியை விட்டு வெளியே குதித்த அதே சமயம் கிளிநொச்சி முகாமிலிருந்து பிரயோகிக்கப்பட்ட 'ஷெல்' லொறியை தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலில் சாரதியும், லொறியின் பின் பக்கத்தில் படுத்திருந்த ஒரு கிளீனரும் பலியானார்கள். மற்றுமொரு கிளீனர் காயங்களுடன் உயிர்தப்பினார். உயிர்தப்பிவந்த கிளீனரே இத்தகவலைத் தெரிவித்தார்.

மேலும் உயிர்தப்பிய அரச அதிபரும், பொதுசன தொடர்பு அதிகாரியும் பரந்தனில் உள்ள ஒரு உத்தியோகத்தர் வீட்டில் பாதுகாப்பாகத் தங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. [மா]

## ஒன்றுபட்டு போராடும்படி கோரும் தி.மு.க. தீர்மானம்

[சென்னை]

இலங்கை இராணுவத்திற்கெதிராக ஒன்றுபட்டுப் போராடுமாறு ஈழவிடுதலை இயக்கங்களை வேண்டிக்கொள்ளும் தீர்மானமொன்று நேற்றுமுன்தினம் சென்னையில் நடைபெற்ற தி. மு. க.வின் பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

தி மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதி பொதுக்குழுவின் கூட்டமுடிவில் நிருபர்களிடம் பேசுகையிலே இத் தகவலை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஈழத்தமிழர்கள் படும் துன்பம் குறித்து தங்கள் கவலையைத் தெரிவிக்க தமிழக மக்கள் மாநிலம் முழுவதும் ஹர்த்தால் நடத்திய பிறகும் இலங்கை இனப்பிரச்னை குறித்து மத்திய அரசு எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென்று அதிருப்தி வெளியிட்டார். [து]

## மரண அறிவித்தல்

### திருமதி சோமசுந்தரம் இராசமலர்

நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த திருமதி இராசமலர் காலமானார். இவர் திரு சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி செல்வி அமுதாவின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று 6 - 6 - 86 வெள்ளிக்கிழமை மு ப. 11 மணியளவில் இல 6 நாச்சிமார் கோவில் வீதி இல்லத்திலிருந்து கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள், மாணவ, மாணவிகள் ஏற்றுக் கொள்ளவும். (C. 2732)

### சரஸ்வதி வேலாயுதம்

கரவெட்டியைச் சேர்தத காலஞ்சென்ற A K. சிற்றம்பலம் [இளைப்பாறிய C P. M.], திருமதி சிற்றம்பலம் ஆகியோரின் அன்புப் புதல்வி சரஸ்வதி வேலாயுதம் காலமானார். இவர் S வேலயுதத்தின் அன்பு மனைவியும், Dr ஜெய்வேந்திரா, கௌரி ஆகியோரின் அன்புந்தாயாரும், குலவரதராஜா, சியாமளா ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற மகேசன், ராசமாணிக்கம், கனகம் ஆகுயோரின் சகோதரியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 7-6-86 சனிக்கிழமை கொழும்பு- 41, விஜயராம மாவத்தை கொழும்பு-7ல் நடைபெறும். [C- 2721]

### திருமதி கனகேஸ்வரி சிவஞானம்

காங்கேசன்துறையைச் சேர்ந்த காலஞ் சென்ற புகையிரத நிலைய அதிபர் சு. சிவஞானம் அவர்களின் அருமை மனைவியும், சாந்தினி, சுகுமாரன், காலஞ் சென்ற ரவிகுமாரன், பிரேமகுமாரன், இன்பகுமாரன் மாதினி, ஜீவகுமாரன் ஆகியோரின் தாயாரும், சண்முகநாதன், ஸ்ரீபத்மினி, கமலவதனி, சிறீதரன் ஆகியோரின் மாமியாரும், புனிதவதி கனகசுந்தரம், புவனேஸ்வரி முத்துக்குமாரு, பரமேஸ்வரி தியாகராசா, ஆகியோரின் சகோதரியுமாகிய கனகேஸ்வரி சிவஞானம் வியாழன் அதிகாலை சிவபதமடைந்தார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் [நேற்று] வியாழன் 5ம் திகதி மாலை "குமரோதயம்", கல்லூரி வீதி, காங்கேசன்துறை இல்லத்தில் மாலை 3 மணிக்கு நடைபெற்றது. [C- 2723]

### திருமதி உமாதேவிப்பிள்ளை

தொண்டமனாற்றைச் சேர்ந்த உமாதேவிப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் சிவசாமியின் அன்பு மனைவியும், விஜயசுந்தரம் (சுந்தரநாதன்), மகமாசி அம்மா தங்கவேல், காலஞ் சென்ற குழந்தைவடிவேல், கமலாதேவி, ஆனந்தவேல் ஆகியோரின் தாயாரும், பாலசுப்பிரமணியம், இரத்தினவேல் காலஞ் சென்ற டங்கயற்செல்வன், நிர்மலாதேவி, லக்சுமிதேவி ஆகியோரின் மாமியுமாவார். அன்னாரது பூதவுடல் இறந்தவரின் பேரன் மகேந்திரன் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு ஈமக்கிரியைகள் 5-6-86 அன்று தொண்டமனாற்றில் நடை பெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி மில்,
தொண்டமனாறு.

[C- 2718]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org